# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

# 1988 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பொது வழிகள் (திருத்தம்) சட்டம்

*[1988, மாச்சு மாதம் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*1988, மாச்சு மாதம் 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : ரூபா 1.50* — *தபாற் செலவு : ரூபா 1.15*

# 1988 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பொது வழிகள் (திருத்தச்) சட்டம்

ச. வ.—ஓ. 24/85
1826

[1988, மாச்சு 25 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

பொதுவழிகள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பொது வழிகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. 1973 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) பொது வழிகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது:— **193 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

**'அலுவலர்கள் சேவையாளர்கள் ஆகியோரின் நியமனம் தத்துவங்கள் முதலியன.**

4. (1) இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் நியமிக்கப்படலாம்.

(2) பணிப்பாளரின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக ஒவ்வொரு பிராந்தியத்தினது பிரதான பொறியியலாளரும் ஒவ்வொரு பிரிவினது நிறைவேற்றுப் பொறியியலாளரும், அவரது பிராந்தியத்தில் அல்லது பிரிவில் இக்கட்டளைச்சட்டத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்பானவராதல் வேண்டும்.

(3) இக்கட்டளைச் சட்டத்தில்—

(அ) "பிராந்தியம்" என்பது ,பிரதான பொறியியலாளர் ஒருவர் தொடர்பாகப் பயன்படுத்தப்படும்போது, அவர் எந்த இடப்பரப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்த இடப்பரப்பு எனப் பொருளாகும் ;

(ஆ) "பிரிவு" என்பது, நிறைவேற்றுப் பொறியியலாளர் ஒருவர் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் போது, அவர் எந்த இடப்பரப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்த இடப்பரப்பு எனப் பொருளாகும்.

(4) இக்கட்டளைச்சட்டத்தினால் பிரதான பொறியியலாளருக்குக் குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் கடமைகளை நிறைவேற்றுதல் பணிப்பாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் என்பதுடன், இக்கட்டளைச் சட்டத்தினால் நிறைவேற்றுப் பொறியியலாளருக்குக் குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் கடமைகளை நிறைவேற்றுதல் பிரதான பொறியியலாளருக்குச் சட்டமுறையானதாதலும் வேண்டும்.

(5) பிரதான பொறியியலாளர் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளர் அல்லாத திணைக்களத்தின் அலுவலர் எவரையேனும், இக்கட்டளைச்சட்டத்தினல் பிரதான பொறியியலாளருக்கு அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் பணியினை நிறைவேற்றுவதற்கு எழுத்தில் அதிகாரம் அளித்தல் பணிப்பாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் என்பதுடன், அப்பணியினை நிறைவேற்றுதல் அத்தகைய அலுவலருக்குச் சட்டமுறையானதாதலும் வேண்டும்.'.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, "அரசாங்கத்தின் சார்பில்" என்ற சொற்கள் அப்பிரிவில் தோன்றும் இடங்களிலெல்லாம் "அதிகார சபையின் சார்பில்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 7அ, 7ஆ, 7இ, அத்துடன் 7ஈ என்னும் புதிய பிரிவுகள் உட்புகுத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் 7அ, 7ஆ, 7இ, அத்துடன் 7ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

உடன்படிக்கையின் அதிகாரத்தின் மீது மாத்திரமே வீதிகளை ஆட்கள் பயன்படுத்தல்.

7அ. ஆள் எவரும் 7 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உடன்படிக்கை ஒன்றில் உள்ள நியதிகள், நிபந்தனைகள் ஆகியனவற்றின்கீழும் அவற்றிற்கு இணங்கவுமன்றி ஏதேனும் பொதுச்சேவை அல்லது ஏதேனும் தனியார் முயற்சி அல்லது குறிக்கோள் என்பவற்றின் நோக்கத்திற்காக, இக்கட்டளைச்சட்டம் ஏற்புடைத்தாகும் வீதி ஒன்றை அல்லது பொதுவழி ஒன்றைப் பயன்படுத்தல் அல்லது அதன்கண் ஏதேனும் வேலையினை நிறைவேற்றுதல் அல்லது ஏதேனும் பொறித்தொகுதியினை அல்லது கட்டமைப்பினை நிறுவுதல் அல்லது பேணுதல் ஆகாது :

ஆயின், அத்தகைய ஏதேனும் உடன்படிக்கையினைப் பின்பற்றி ஏதேனும் வீதியில் ஏதேனும் அகழ்வு அல்லது தோண்டுகை அல்லது வெட்டுகை தொடங்குவதற்கு அனுமதிக்கப்படுமுன்னர், பிரதான பொறியியலாளரால் மதிப்பீடு செய்யப்பட்டவாறாக, அத்தகைய அகழ்வு அல்லது தோண்டுகை, அல்லது வெட்டுகையின் பின்னர் அத்தகைய வீதியினை மீள அமைப்பதற்கு அல்லது பழுதுபார்ப்பதற்கு ஆன செலவுகளையும், அத்தகைய மீள அமைத்தல் அல்லது பழுதுபார்த்தல் ஆகியனவற்றிற்குச் செலவாகும் மதிப்பீடு செய்யப்பட்ட செலவின் பத்துவீத அளவிலான மேலதிக வைப்புத் தொகையையும் சேர்த்து பிரதான பொறியியலாளருக்குச் செலுத்துதல் வேண்டும்.

ஆயின், மேலும், காப்பு வாசகத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட மேலதிக வைப்புப்பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கான தேவைப்பாடு அரசாங்கத் திணைக்களம் ஒன்றின் விடயத்தில் ஏற்புடையதாதலாகாது.

ஆட்கள் குழிகளை அல்லது அகழிகளை மீள நிரப்புதல்.

7ஆ. ஏழாம் பிரிவின்கீழ் உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டவரும் வீதி ஒன்றுக்குச் சேதம் விளைவிக்கும்வகையில் அகழ்கின்ற, தோண்டுகின்ற, வெட்டுகின்ற அல்லது சேதம் விளைவிக்கும் வகையில் வேறு எதையும் செய்கின்றவருமான ஆள் எவரும், அத்தகைய அகழ்வு, தோண்டுதல் அல்லது வெட்டுதல் அவசியமான அந்த வேலை முடிந்தவுடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதற்கென 7 ஆம் பிரிவின்கீழான உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நேரம் எதற்கும் பிந்தாமல் அவர் அகழ்ந்ததால், தோண்டியதால் அல்லது வெட்டியதால் தோற்றுவிக்கப்பட்டதான அகழியை அல்லது குழியை நிறைவேற்றுப் பொறியியலாளர் குறிப்பிட்டவாறான மட்டத்திற்கு நிறைவேற்றுப் பொறியியலாளரால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய இறுக்கத்திலான அடுக்களில் நிறைவேற்றுப் பொறியியலாளரால் அங்கிகரிக்கப்பட்டதான நிரப்புப் பொருட்களைக் கொண்டு மீள நிரப்புதல் வேண்டும். நிறைவேற்றுப் பொறியியலாளர் மீள நிரப்பப்படுதல் திருப்திகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது எனத் திருப்தியடைந்ததன் மேல், 7அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பத்துவீத மேலதிக வைப்பு, மேம்படுத்துநருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய ஆள் அத்தகைய உடன்படிக்கையில் குறிக்கப்பட்ட நேரத்திற்குள்ளாக மீள நிரப்புதலைச் செய்யத் தவறுமிடத்து அல்லது மீள நிரப்புதலானது நிறைவேற்றுப் பொறியியலாளரால் பணிக்கப்பட்ட முறையில் பூர்த்தி செய்யப்படாதவிடத்து, அப்போது நிறைவேற்றுப் பொறியியலாளரானவர், மீள நிரப்புதலைப் பூர்த்தி செய்யுமாறு செய்வித்து மீள நிரப்புவதற்கான செலவினை 7அ என்னும் பிரிவின்கீழ் வைப்பிலிடப்பட்ட தொகைகளுக்கு எதிராகக் கழித்துவிடுதல் வேண்டும்.

7அ என்னும் பிரிவினை மீறுதல் தவறொன்றாகும்.

7இ. இக்கட்டளைச்சட்டமானது ஏற்புடைத்தான ஏதேனும் தெருவை அல்லது பொது வழியினைப் பயன்படுத்துபவரான எவரேனும் ஆள், 7அ என்னும் பிரிவினை மீறும்வகையில் அதன்கண் வேலைகளை நிறைவேற்றினால் அல்லது பொறித் தொகுதியினை அல்லது நிறுவல் தொகுதியினைப் பேணினால், அவர் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவிற்கு விஞ்சாத ஒரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

முட்டுக்கட்டைகளைத் தணித்தல்.

7ஈ. ஏழாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையில் அடங்கியுள்ள அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணான எதுவும் எப்படியிருப்பினும், 7 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உடன்படிக்கை ஒன்றினைப் பின்பற்றி ஏதேனும் தெருவில் அல்லது பொதுவழியில் முட்டுக்கட்டை ஒன்றினைச் செய்வித்த எவரேனும் ஆளுக்கு, நிறைவேற்றுப் பொறியியலாளர் திருப்திப்படும்வகையில் அத்தகைய முட்டுக்கட்டையினை, அதற்கெனக் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நேரத்திற்குள்ளாக அகற்றுமாறு அல்லது தணிக்குமாறு அறிவித்தல் வழங்குதல் சட்டமுறையானதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆள் அத்தகைய முட்டுக்கட்டையினை அத்தகைய நேரத்திற்குள்ளாக அகற்றத் தவறினால் அல்லது அகற்றுவதில் கவனயீனமாக இருந்தால் அல்லது அத்தகைய ஆளைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தால், அத்தகைய முட்டுக்கட்டையினை அகற்றி அல்லது தணித்து அதனால் உறப்பட்ட செலவினை 33 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அறவீடு செய்தல் நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட எவரேனும் ஆளுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய அகற்றுகையால் அல்லது தணிக்கையால் ஏற்பட்ட அத்தகைய உடன்படிக்கையின் ஏதேனும் முறிவுக்காக அத்தகைய ஆளுக்கு நஷ்டஈடு எதுவும் வழங்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1) இவ்வுட்பிரிவு வலுவுடையயதாக வரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும்—

(அ) பிரிவினது நிறைவேற்றுப் பொறியியலாளரால் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின் அதிகாரத்தின் கீழன்றி, (இதனகத்துப் பின்னர் "கட்டட எல்லை" எனக் குறிப்பீடு செய்யப்படும்.)

(i) பெருந்தெருக்கள் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ள "அ" வகுப்பைச் சேர்ந்த வீதி ஒன்று என கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் பணிப்பாளரால் வெளிப்படுத்தப்பட்ட வீதி ஒன்றன் விடயத்தில் வீதியின் நடுவிலிருந்து பதினைந்து மீட்டராகவும்;

(ii) பெருந்தெருக்கள் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ள "ஆ" வகுப்பைச் சேர்ந்த வீதி ஒன்று எனக் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் பணிப்பாளரால் வெளிப்படுத்தப்பட்ட வீதி ஒன்றின் விடயத்தில் வீதியின் நடுவிலிருந்து பதினைந்து மீட்டராகவும் ;

(iii) பெருந்தெருக்கள் திணைக்களத்தின் பொறுப்பில் உள்ள "இ" அல்லது "ஈ" என்னும் வருப்பைச் சேர்ந்த வீதி ஒன்று என கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் பணிப்பாளரால் வெளிப்படுத்தப்பட்ட வீதி ஒன்றின் விடயத்தில் வீதியின் நடுவிலிருந்து ஏழு தசம் ஐந்து மீட்டராகவும்,

உள்ள எல்லைக்குள்ளாக ஏதேனும் கட்டடத்தினை எல்லைச் சுவரை, வாயில் வழியை அல்லது வேறு ஏதேனும் கட்டமைப்பை நிறுவுதல் அல்லது அடித்தளம் ஒன்றினை அல்லது நிலத்துக்குக் கீழான கட்டமைப்பை அமைத்தல், கிணறு ஒன்றினை, குளம் ஒன்றினை அல்லது சுரங்க வாயிற்குழி ஒன்றினைத் தோண்டுதல்—

(ஆ) நிறைவேற்றுப் பொறியியலாளரால் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின் அதிகாரத்தின் கீழன்றி ஏதேனும் அத்தகைய வீதியின் கட்டட எல்லைகளுக்குள்ளாக ஏதேனும் கட்டடம், எல்லைச் சுவர், வாயில்வழி அல்லது வேறு ஏதேனும் கட்டமைப்பு அல்லது ஏதேனும் அடித்தளம் அல்லது வேறு நிலத்துக்குக் கீழான கட்டமைப்பு அல்லது ஏதேனும் கிணறு, குளம் அல்லது சுரங்கவாயிற் குழி என்பனவற்றை மீள நிறுவுதல் அல்லது அவற்றுக்கு ஏதேனும் மேலதிக அமைப்புக்களை அமைத்தல்

எவரேனும் ஆளுக்குச் சட்ட முறையானதாகாது :

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவு நடைமுறைக்கு வருவதற்குமுன்னர் எக்கட்டடத்தின் எல்லைச் சுவரை அல்லது வாயில் வழியைப் பழுதுபார்த்தற்கு உரிமம் அவசியமானதோ அக்கட்டடத்தின், எல்லைச் சுவரின் அல்லது வாயில் வழியின் திருத்தமல்லாத, இவ்வுட்பிரிவு வலுவுடையதாக வரும் தேதியன்று இருப்பவையான, ஏதேனும் கட்டடத்திற்கு, எல்லைச் சுவருக்கு, வாயில் வழிக்கு அல்லது ஏதேனும் வேறு கட்டமைப்புக்கு அல்லது ஏதேனும் அடித்தளத்திற்கு அல்லது வேறு நிலத்திற்குக் கீழான கட்டமைப்புக்கு அல்லது கிணற்றிற்கு அல்லது குளத்திற்கு அல்லது சுரங்க வாயிற் குழிக்குச் செய்யப்படும் பழுதுபார்த்தல்களுக்கு, முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எவையும் ஏற்புடைத்தாவதாகக் கருதப்படுதல் ஆகாது ; அத்துடன்

(2) இரண்டாம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவில் "கட்டடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் வழி" அல்லது "கட்டடம், சுவர் அல்லது வாயில் வழி" என்ற சொல்லமைப்புக்கள் தோன்றுகின்ற இடங்களிலெல்லாம் அத்தகைய சொல்லமைப்புகளுக்குப் பதிலாக "கட்டடம், எல்லைச் சுவர், வாயில்வழி அல்லது வேறு கட்டமைப்பு அல்லது ஏதேனும் அடித்தளம் அல்லது வேறு நிலத்திற்குக் கீழான கட்டமைப்பு அல்லது ஏதேனும் கிணறு, குளம் அல்லது சுரங்க வாயிற்குழி" என்ற சொல்லமைப்பை இடுவதன் மூலமும்".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 24அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

6. இருபத்துநான்காம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவானது உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"நிறைவேற்றுப் பொறியியலாளரின் அனுமதியின்றிக் கட்டட அங்கிகாரம் எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

24அ. ஒரு கட்டடம், எல்லைச்சுவர், வாயில் வழி அல்லது வேறு கட்டமைப்பு அல்லது ஏதேனும் அடித்தளம் அல்லது வேறு நிலத்துக்குக் கீழான கட்டமைப்பு அல்லது ஏதேனும் கிணறு, குளம் அல்லது சுரங்க வாயிற்குழி என்பனவற்றை நிறுவுவதற்கு அல்லது மீள நிறுவுவதற்குத் தேவையான அங்கிகாரத்தை எந்த அதிகாரசபை வழங்க வேண்டுமோ, அந்த அதிகாரசபை அத்தகைய நிறுவுதல் அல்லது மீள நிறுவுதல் 24 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றினால் அதிகாரம் வழங்கப்பட்டதாக இருந்தாலன்றி அப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கட்டட எல்லைக்குள்ளாக கட்டம் ஒன்றை நிறுவுவதற்கு அல்லது மீள நிறுவுவதற்கான அத்தகைய அங்கிகாரத்தை வழங்குதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 25அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

7. இருபத்தைந்தாம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"புதிய வீதி ஒன்றுக்கு ஒதுக்கு ஒன்றை வெளிப்படுத்தல்.

25அ. அமைச்சர், பணிப்பாளரின் பரிந்துரையின் மேல், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் நில அளவை வரைபடம் ஒன்றில் குறிப்பிடப்பட்டதும் அத்தகைய கட்டளையில் போதுமான விபரங்களுடன் விவரிக்கப்பட்டு இனங்கண்டுகொள்ள வாய்ப்பாக வீதியின் நீள அகலம் குறித்துரைக்கப்பட்டதுமான காணியின் இடப்பரப்பு, கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட வாறான அத்தகைய வகுப்பைச் சார்ந்த பகிரங்க வீதி அமைத்தற்குப் பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளதென வெளிப்படுத்தலாம். கசெற்றில் கட்டளை வெளியிடப்பட்டதன் மேல், கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினதான வீதிக்கு ஏற்புடைத்தாகும் கட்டட எல்லைக்குள்ளான, ஏதேனும் கட்டடம், எல்லைச் சுவர், வாயில்வழி அல்லது வேறு கட்டமைப்பு அல்லது

ஏதேனும் கிணறு, குளம் அல்லது சுரங்கவாயிற்குழி என்பனவற்றை அமைத்தலை அல்லது மீளமைத்தலைத் தடைசெய்வதான இக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காணி இடப்பரப்பின் விசாலத்திற்கும் அதன் தொடர் பாகவும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

இருபத்து நான்காம் பிரிவினை மீறுவதன்மேல் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

(26) (1) எவரேனும் ஆள் ஏதேனும் கட்டிடத்தை எல்லைச் சுவரை, வாயில் வழியை அல்லது வேறு கட்டமைப்பை அல்லது ஏதேனும் அடித்தளத்தை அல்லது வேறு நிலத்துக்குக் கீழான கட்டமைப்பை அல்லது ஏதேனும் கிணற்றை குளத்தை அல்லது சுரங்க வாயிற் குழியை நிறுவினால் அல்லது மீளநிறுவினால் அல்லது 24 ஆம் பிரிவின் ஏற்பாடுகளில் எவற்றையேனும் மீறி ஏதேனும் கட்டிடத்திற்கு, எல்லைச் சுவருக்கு வாயில் வழிக்கு அல்லது வேறு கட்டமைப்புக்கு அல்லது ஏதேனும் அடித்தளத்திற்கு அல்லது வேறு நிலத்துக்குக் கீழான கட்டமைப்புக்கு அல்லது ஏதேனும் கிணற்றுக்கு, குளத்துக்கு அல்லது சுரங்கவாயிற்குழிக்கு எதனையும் மேலதிகமாகச் செய்தால் நிறைவேற்றுப் பொறியியலாளர், எழுத்திலான அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நாளன்று அல்லது அதற்கு முன்னர் அத்தகைய கட்டிடத்தை, எல்லைச்சுவரை, வாயில் வழியை அல்லது கட்டமைப்பை அல்லது ஏதேனும் அடித்தளத்தை அல்லது வேறு நிலத்துக்குக் கீழான கட்டமைப்பை, அல்லது ஏதேனும் சுவரை, குளத்தை அல்லது சுரங்க வாயிற் குழியை அல்லது அதற்கான ஏதேனும் மேலதிகச் சேர்க்கையை அழிக்குமாறு அல்லது அகற்றுமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ், எவ்வாளுக்கு அறிவித்தலொன்று வழங்கப்பட்டதோ அவ்வாள், அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அல்லது அதன் சார்பாகச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது, நிறைவேற்று பொறியியலாளரால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்தினுள், அத்

தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேவைப் பாடுகளுக்கு இணங்கியொழுகுதல், அவரது கடமை யாதல் வேண்டும்.

(3) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறி வித்தலொன்றைப் பின்பற்றி ஏதேனும் கட்டி டம், எல்லைச்சுவர், வாயில்வழி அல்லது வேறு கட்டமைப்பு அல்லது ஏதேனும் அடித்தளம் அல்லது வேறு நிலத்தின் கீழான கட்டமைப்பு அல்லது ஏதேனும் கிணறு, குளம் அல்லது சுரங்க வாயிற்குழி அழிக்கப்படாதவிடத்து அல்லது அகற்றப்படாதவிடத்து, அறிவித்த லில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள், அல் லது நிறைவேற்றுப் பொறியியலாளரால் வழங்கப்பட்டிருக்கக்கூடியவாறான அத்தகைய அதிகரிக்கப்பட்ட காலத்தினுள், அத்தகைய கட்டிடத்தை, எல்லைச்சுவரை, வாயில் வழியை, அல்லது வேறு கட்டமைப்பை அல் லது ஏதேனும் அடித்தளத்தை அல்லது வேறு நிலத்துக்குக் கீழான கட்டமைப்பை அல்லது ஏதேனும் கிணற்றை, குளத்தை அல்லது சுரங்க வாயிற்குழியை அழிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நிறைவேற்றுப் பொறியியலா ளருக்கு அதிகாரமளிக்கும் விதிப்பாணைக் கட் டளையை ஆக்குமாறு நீதிவானுக்கு, நிறைவேற் றுப் பொறியியலாளர் விண்ணப்பம் செய்ய லாம். அத்துடன், அத்தகைய கட்டிடத்தை, எல்லைச் சுவரை, வாயில் வழியை அல்லது வேறு கட்டமைப்பை அல்லது ஏதேனும் அடித்தளத்தை அல்லது வேறு நிலத்துக்கு கீழான கட்டமைப்பை அல்லது ஏதேனும் கிணற்றை, குளத்தை அல்லது சுரங்கவாயிற் குழியை அழிப்பதற்கான அல்லது அகற்றுவ தற்கான, ஓராம் உட்பிரிவின் கீழான நிறை வேற்றுப் பொறியியலாளரின் தேவைப்பாட் டோடு இணங்கியொழுகத் தவறிய ஆள்மீது நீதிவான் அறிவித்தல் வழங்குவதன், மேல், அவ்வாறான இணங்கியொழுகாமை பற்றி அவர் திருப்தி அடைந்தால், அதற்கிணைய கட்டளையை ஆக்கலாம்.

(ஆ) அத்தகைய கட்டிடத்தை, எல்லைச்சுவரை, வாயில்வழியை அல்லது வேறு கட்டமைப்பை அல்லது ஏதேனும் அடித்தளத்தை அல்லது வேறு நிலத்துக்குக் கீழான கட்டமைப்பை அல்லது ஏதேனும் சுவரை, குளத்தை அல்லது சுரங்க வாயிற்குழியை அழிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு அத்தகைய ஆள் பொறுப்பேற்றால், நீதிவான் தக்கதென எண்ணினால் அத்தகைய கட்டிடத்தை, எல்லைச்சுவரை, வாயில் வழியை அல்லது வேறு கட்டமைப்பை அல்லது ஏதேனும் அடித்தளத்தை அல்லது வேறு நிலத்தின் கீழான கட்டமைப்பை அல்லது ஏதேனும் கிணற்றை, குளத்தை அல்லது சுரங்க வாயிற்குழியை அழிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை ஆளுக்குக் கொடுக்கும் நோக்கத்துக்காக அவர் போதுமானதென்று நினைக்கும் அத்தகைய, இரண்டு மாதங்களை விஞ்சாத காலத்துக்கு, கட்டளையை நடைமுறைப்படுத்துவதனைப் பிற்போடலாம்.

(4) மூன்றும் உட்பிரிவின் கீழ் விதிப்பாணைக் கட்டளையொன்று ஆக்கப்பட்டிருக்குமிடத்து, கட்டளையைச் செயற்படுத்துவதற்கு அவசியமான உதவிகளை நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு வழங்குதல் பொலிசு அதிகார சபைகளின் கடமையாதல் வேண்டும்.

(5) மூன்றும் உட்பிரிவின் கீழ் நீதிவானால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றைப் பின்பற்றி, ஏதேனும் கட்டிடத்தை, எல்லைச்சுவரை, வாயில் வழியை அல்லது வேறு கட்டமைப்பை அல்லது ஏதேனும் அடித்தளத்தை அல்லது வேறு நிலத்துக்குக்கீழான கட்டமைப்பை அல்லது ஏதேனும் கிணற்றை, குளத்தை அல்லது சுரங்க வாயிற்குழியை அழிப்பதில் அல்லது அகற்றுவதில் நிறைவேற்றுப் பொறியியலாளரால் உறப்பட்ட எல்லா நியாயமான செலவுகளையும் அறவிடுவதற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவானது, அப்பிரிவில் "கட்டடம், எல்லைச்சுவர் அல்லது வாயில் வழி" என்ற சொல்லமைப்புக்கள் (அதன் (ஈ) என்னும் பந்தியில் தவிர) தோன்றுகின்ற இடங்களிலெல்லாம் அச்சொல்லமைப்புக்குப் பதிலாக, "கட்டடம், எல்லைச்சுவர், வாயில் வழி அல்லது வேறு கட்டமைப்பு அல்லது வேறு ஏதேனும் அடித்தளம் அல்லது வேறு நிலத்திற்குக் கீழான கட்டமைப்பு அல்லது ஏதேனும் கிணறு, குளம், அல்லது சுரங்க வாயிற்குழி" என்ற சொல்லமைப்பை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது"; முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "கட்டடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் வழி" என்ற சொல்லமைப்புத் தோன்றுகின்ற இடங்களிலெல்லாம் அச்சொல்லமைப்புக்குப் பதிலாக, "கட்டடம், எல்லைச் சுவர், வாயில் வழி அல்லது வேறு கட்டமைப்பு அல்லது ஏதேனும் அடித்தளம் அல்லது வேறு நிலத்திற்குக் கீழான கட்டமைப்பு அல்லது ஏதேனும் கிணறு, குளம் அல்லது சுரங்க வாயிற்குழி" என்ற சொல்லமைப்பை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "கட்டடம், எல்லைச் சுவர் அல்லது வாயில் வழி" என்ற சொல்லமைப்புத் தோன்றுகின்ற இடங்களிலெல்லாம் அச்சொல்லமைப்புக்குப் பதிலாக, "கட்டடம், எல்லைச்சுவர், வாயில் வழி அல்லது வேறு கட்டமைப்பு அல்லது ஏதேனும் அடித்தளம் அல்லது வேறு நிலத்திற்குக் கீழான கட்டமைப்பு அல்லது ஏதேனும் கிணறு, குளம் அல்லது சுரங்க வாயிற்குழி" என்ற சொல்மைப்பை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில்,

(i) "கட்டடம், எல்லைச்சுவர் அல்லது வாயில் வழி" என்ற சொல்லமைப்புக்கள், அதன் (ii) ஆம் உட்பந்தியில் தவிர, தோன்றுகின்ற இடங்களிலெல்லாம் அச்சொல்மைப்புக்குப் பதிலாக, "கட்டடம், எல்லைச்சுவர், வாயில் வழி அல்லது வேறு கட்டமைப்பு அல்லது ஏதேனும் அடித்தளம் அல்லது வேறு நிலத்திற்குக் கீழான கட்டமைப்பு அல்லது ஏதேனும் கிணறு, குளம், அல்லது சுரங்க வாயிற்குழி" என்ற சொல்லமைப்புக்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ii) அதன் (ii) ஆம் உட்பந்தியில் தோன்றுகின்ற "எல்லைச் சுவர் அல்லது வாயில் வழி ஒன்றின் விடயத்தில்," என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஒரு எல்லைச்சுதர், வாயில் வழி அல்லது வேறு கட்டமைப்பு அல்லது ஏதேனும் அடித்தளம் அல்லது வேறு நிலத்திற்குக் கீழான கட்டமைப்பு அல்லது ஏதேனும் கிணறு, குளம் அல்லது சுரங்க வாயிற்குழி என்பனவற்றின் விடயத்தில்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவில் (3) ஆம் உட்பிரிவில் "கட்டடம், எல்லைச்சுவர் அல்லது வாயில் வழி" என்ற சொல்லமைப்புக்கள் அப்பிரிவில் தோன்றுகின்ற இடங்களிலெல்லாம் "கட்டடம், எல்லைச்சுவர், வாயில் வழி, அல்லது வேறு கட்டமைப்பு அல்லது ஏதேனும் அடித்தளம் அல்லது வேறு நிலத்திற்குக் கீழான கட்டமைப்பு அல்லது ஏதேனும் கிணறு, குளம் அல்லது சுரங்க வாயிற்குழி" என்ற சொல்லமைப்பை இடுவதன் மூலமும்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் காணப்படும் "கட்டடம், எல்லைச்சுவர் அல்லது வாயில் வழி" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக, "கட்டடம் எல்லைச் சுவர், வாயில் வழி அல்லது வேறு கட்டமைப்பு அல்லது ஏதேனும் அடித் தளம் அல்லது வேறு நிலத்திற்குக் கீழான கட்டமைப்பு அல்லது ஏதேனும் கிணறு, குளம் அல்லது சுரங்க வாயிற்குழி" என்ற சொல்லமைப்புக் களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவானது, "போக்கு வரத்துப் பாதை எதனையும் தடைசெய்பவரான அல்லது சேர்த்தெல்லை யிடுபவரான எவரேனும் ஆளுக்கு, அதனை உடனடியாக அகற்றுமாறு அல்லது குறைக்குமாறு வாய்மொழிமூலம் அல்லது எழுத்திலான அறிவித் தல் மூலம் கட்டளையிடுவது நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு சட்ட முறையானதாதல் வேண்டும் என்பதுடன்; அத்தகைய கட்டளையானது வழங்கப்பட்டவரான எவரேனும் அத்தகைய ஆள், அதற்கு மறுத்தால் அல்லது அதற்கு இணங்கி ஒழுகுவதில் கவனமின்மையாக இருந்தால்" என்ற சொற்களுக்குப் பதிலாக, ஏதேனும் "போக்குவரத்துப் பாதை எதனையும் தடைசெய்பவரான அல்லது சேர்த்தெல்லையிடுபவரான எவரேனும் ஆளுக்கு, குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது தேதிக்கு முன்னர் அதனை உடனடியாக அகற்றுமாறு அல்லது குறைக்குமாறு எழுத்திலான அறிவித்தல் மூலம் கட்டளையிடுவது நிறைவேற்றுப் பொறி யியலாளருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்" என்பதுடன் அத் தகைய கட்டளையானது வழங்கப்பட்டவரான எவரேனும் அத்தகைய ஆள், அதற்கு மறுத்தால் அல்லது இணங்கி ஒழுகுவதில் கவனமின்மை யாக இருந்தால்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. பின்வரும் புதிய பிரிவானது 33 ஆம் பிரிவை உடனடுத்து இத் தால் உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 33அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் 33அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"எதிர்ப்பு எதிர்பார்க்கப் படுமிடத்தான நடவடிக்கை.

33அ. 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க அரச காணிகள் (உடைமை மீட்பு) சட்டத்தின் ஏற்பாடுகளை இக்கட்டளைச் சட்டமானது ஏற்புடைத்தாவதான ஏதேனும் வீதிக்கு ஏற்புடைத்தாக்கும் நோக்கத் திற்கு—

(அ) இக்கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு எழுத்திலான அறி வித்தலும் அச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஒரு அறிவித்தலாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) அச்சட்டத்திலுள்ள "தகுதிவாய்ந்த அதி காரி" என்ற சொல்லமைப்பு பணிப்பாளர், பிரதான பொறியியலாளர் அத்துடன் நிறை வேற்றுப் பொறியியலாளர் என்போரைக் குறிப்பிடுவதை உள்ளடக்குவதாகக் கருதப் படுதல் வேண்டும்;

(இ) "அரச காணி" என்ற சொல்லமைப்பு இக் கட்டளைச் சட்டமானது ஏற்புடைத்தாகும் ஒவ்வொரு வீதியையும் குறிப்பிடுவதை உள் ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத் தின் 35 ஆம் பிரிவைத் திருத் துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவில் தோன்றும் "ஐம்பது ரூபாவிற்கு" என்ற சொற்களுக் குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவிற்கு" என்ற சொற்களை இடு வதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (8) ஆம் பந்தியை உடனடுத்து, அப்பிரிவின் (9) ஆம் (10) ஆம், (11) ஆம் பந்திகளாகப் பயனுற வேண்டிய பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(9) ஏதேனும் மதகின் பாலத்தின் அல்லது பக்க வடிகாலின் வாயிலினூடாகத் தண்ணீர் தங்குதடையின்றிச் செல் வதனைத் தடுக்கும்வகையில் மூட்டுக்கடை இடும்வகையில் அல்லது தடங்கல்செய்யும் வகையில் அதன் வாயிலை முழு மையாக அல்லது பகுதியளவில் அடைப்பிக்கும் அல்லது ஒரு மதகிற்கு அல்லது ஒரு பாலத்திற்கு அண்மையி லுள்ள வீதி ஒன்றுக்கு அனித்தாயுள்ள ஏதேனும் காணி யில் கட்டமைப்பு ஒன்றை நிறுவுவிக்கும், அணையொன் றைக் கட்டுவிக்கும் அல்லது நிலத்தை உயர்த்துவிக்கும் அல்லது வேறு ஏதேனும் செயலை நிறைவேற்றுவிக்கும், அல்லது ஒரு மதகினூடாக, பாலத்தினூடாக அல்லது பக்க வடிகாலினூடாக தண்ணீர் தடையின்றிப் பாய் வதற்கு ஏதேனும் இடையீட்டை அல்லது தடங்கலை விளைவிக்கும் எவரும் ;

(10) அதிகாரமின்றி ஏதேனும் பொதுவழியினை அகழ்வதன் மூலம் ஏதேனும் பொதுவழிக்கு அடுத்துள்ளதான அல் லது அண்மையிலுள்ள ஏதேனும் காணியினை அகழ்வதன் மூலம் பொதுவழி ஒன்றுக்குச் சேதம் விளைவிப்பவர் எவரும் ;

(11) வீதியின் மேற்பரப்பின்மேல் நேரடியாக அழுத்துவதான தும் சில்லுகள் அல்லது தயர்கள் அல்லாதவையான நகரச்செய்வதற்கான வேறு கருவி ஒன்றினைக் கொண் டுள்ள வாகனம் ஒன்றினை ஏதேனும் பொது வீதியின் வழியாக அல்லது அதற்குக் குறுக்காகச் செலுத்துபவ ரான, கட்டியிழுப்பவரான அல்லது நகரச்செய்பவரான எவரும்.".

15. பின்வரும் புதிய பிரிவுகள் 35 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 35அ, அத்துடன் 35ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

முதன்மைச் சட்டவாக்கத்தில் 35அ அத்துடன் 35ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

'தொடரும் தவறுகள்.

35அ. பிரிவு 35 இன் கீழான தவறு ஒன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் எவரும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் தவறு தொடர்ந்து புரியப்பட்டால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்பின்னர் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் இருநூறு ரூபாவிற்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.

பொதுவழிகளுக்கு ஏற்படும் ஊறுகளைத் தணித்தல்.

35ஆ. பிரிவு 35 இல் உள்ள ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், 35 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் செயலைச் செய்துகொண்டிருக்கும் அல்லது செய்யும் எவரேனும் ஆளுக்கு உடனடியாக அதனைத் தணிக்குமாறு வாய்மொழிமூலம் அல்லது எழுத்தில், கட்டளை இடுவது நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளையானது எந்த ஆளுக்குக் கொடுக்கப்பட்டதோ அத்தகைய ஆள், கட்டளையில் குறித்துரைக்கப்பட்டதான காலத்திற்குள்ளாகக் கட்டளைக்கு இணங்கியொழுக மறுத்தால் அல்லது இணங்கியொழுகுவதில் கவனயீனமாக இருந்தால் அல்லது அத்தகைய கட்டளையானது எவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளரால் அதற்கென எழுத்தில் அதிகாரம் வழங்கப்பட்டவரான எவரேனும் ஆளுக்கு, ஏதேனும், வீட்டினுள், தோட்டத்தினுள், அடைப்பின் அல்லது வேறு வளவுகளினுள், அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய ஆட்களுடனும் கருவிகளுடனும் பொருட்களுடனும் பிரவேசித்து அல்லது பிரவேசிக்கச் செய்து, அத்தகைய தணித்தலுக்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய எல்லா வேலைகளையும் செய்தல் அல்லது செய்வித்தல் சட்டமுறையானதாதல் வேண்டும், அத்துடன் 33 ஆம் பிரிவில், செலவுகளை அறவிடுசெய்வதற்கு ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அத்தகைய தணித்தலின்போது உறப்பட்ட செலவுகளை நிறைவேற்றுப் பொறியியலாளர் அறவிடலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவில் தோன்றும் "அத்தகைய வடிகாலின் நீளத்தில் நான்கு அடிக்குக் குறைவான" என்ற சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய வடிகாலின் நீளத்தில் 2.5 மீட்டருக்குக் குறைவாகவும், அதன் குறுக்கு அளவு 3720 சதுர சென்டி மீட்டருக்குக் குறையாமல் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளர் எழுத்திலான அறிவித்தல்மூலம் பணிப்பதான அத்தகைய வேறு இடப்பரப்புக்குக் குறையாமல் துவாரம் ஒன்றினை உடைய அத்தகைய வடிகால்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) "அதற்கான செலவுத்தொகையை அறவிடச் செய்தலும் வேண்டும்" என்ற சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"அதற்கான செலவுத்தொகையை அறவிடச் செய்தலும் வேண்டும் :

ஆயின், நிறைவேற்றுப் பொறியியலாளர் அத்தகைய ஒரு வடிகாலை அமைப்பதற்கு அல்லது அகழ்வதற்கு எண்ணியிருத்தல் பற்றிப் பொதுமக்களுக்கு அறிவித்தல் கொடுத்தால், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், அத்தகைய வீதிக்குப் பக்கத்தில் வடிகால் ஒன்று இருந்ததுபோன்ற அதேமுறையில் ஏற்புடைத்தானதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவில் தோன்றும் "ஐம்பது ரூபாவிற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவிற்கு" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் பந்திக்கான காப்புவாசகத்தில்—

(அ) அக்காப்பு வாசகத்தில் "ஒரு ரூபாவை" என்ற சொற்கள் எங்கெல்லாம் தோன்றுகின்றனவோ அங்கெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக "எழுபத்தைந்து ரூபாவை" என்ற சொற்களை இடுவதன்மூலமும்"; அத்துடன்

(ஆ) "முப்பது சதத்திற்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக "பத்து ரூபாவிற்கு" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (9) ஆம் பந்தியில் "அதனை அகற்றுவதற்கு" என்பது தொடக்கம் "அது இருக்க விடுபவருமான" என்ற எல்லாச் சொற்களையும் விட்டுவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவின் (14) ஆம் பந்தியினை உடனடுத்து அப்பிரிவின் (15), (16) அத்துடன் (17) ஆம் பந்திகளாகப் பயனுற வேண்டியவையான பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(15) நிறைவேற்றுப் பொறியியலாளரின் அனுமதியின்றிப் பொதுவழி ஒன்றில் ஏதேனும் சைகைப் பலகையினை, திசைகாட்டு பலகையினை அல்லது சுவரணைப் பலகையினை நிறுவுபவரான ஆள் ;

(16) சட்டமுறையான அதிகாரமின்றி ஏதேனும் தெருவுக்குக் குறுக்காக அல்லது ஓரமாக கயிறு ஒன்றினை அல்லது கப்பி ஒன்றினைக் கட்டுபவரான அல்லது குழாய் ஒன்றினை அல்லது குழல் ஒன்றினை இடுபவரான ஆள் ;

(17) சட்டமுறையான அதிகாரமின்றி ஏதேனும் தெருவில் ஏதேனும் பயணவண்டியை, மோட்டார் வாகனத்தை, வண்டிலை அல்லது வேறு சாமானை அல்லது ஏதேனும் கால்நடையினை அல்லது ஏதேனும் வேறு விலங்கினை கழுவுபவரான ஆள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 38அ அத்துடன் 38ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

18. பின்வரும் புதிய பிரிவுகளானவை 38 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 38அ அத்துடன் 38ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

'தொடரும் தவறுகள்.

38அ. பிரிவு 38 இன் கீழான தவறு ஒன்றுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் எவரும், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்பின்னர் தவறு தொடர்ந்து புரியப்பட்டால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் இருநூறு ரூபாவிற்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.

பொதுவழிகளில் தொல்லைகளைத் தணித்தல்.

38ஆ. பிரிவு 38 இன் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் 38 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயலைப் புரியும் அல்லது புரிந்த எவரேனும் ஆளுக்கு உடனடியாக அதனைத் தணிக்குமாறு ஒன்றில் வாய்மொழிமூலம் அல்லது எழுத்தில் கட்டளையிடுதல் நிறைவேற்றுப் பொறியியலாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளையானது எந்த ஆளுக்குக் கொடுக்கப்பட்டதோ அத்தகைய ஆள் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாகக் கட்டளைக்கு இணங்கியொழுக மறுத்தால் அல்லது இணங்கியொழுகுவதில் கவனயீனமாக இருந்தால் அல்லது அத்தகைய கட்டளையானது எவருக்குக் கொடுக்கப்படவேண்டுமென்பதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு அல்லது எவரேனும் சமாதான அலுவலர்க்கு அத்தகைய தொல்லைக்குக் காரணமாக இருக்கும் அல்லது அத்தகைய தொல்லைக்கு உதவும்வகையில் உள்ள ஏதேனும் விலங்கினை, வாகனத்தை, பொருளை அல்லது பண்டத்தைக் கைப்பற்றி அகற்றுவது உட்பட அத்தகைய தொல்லையினைத் தணிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய செயல்களைச் செய்தல் சட்டமுறையானதாதல் வேண்டும், அத்துடன் நிறைவேற்றுப் பொறியியலாளர் அதனுடன் உறப்பட்ட செலவுகளை அறவிடுவதற்கென் 33 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அறவிடலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 39அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

19. பின்வரும் புதிய பிரிவானது 39 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

'ஒழுங்குவிதிகள்.

39அ. (1) அமைச்சர், பின்வரும் எல்லாக் கருமங்களும் அல்லது அவற்றில் எதுவும் தொடர்பாக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) ஏதேனும் பொது பகிரங்க வீதி அல்லது பாலம் என்பவற்றின் கட்டமைப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றிய பொது அளவுக் குறிப்புகள் ;

(ஆ) பகிரங்க வீதிகளின் ஓரமாக நீள்வரிப்பாணி அபிவிருத்தியைத் தடுப்பதற்கு ;

(இ) பிரதான பொதுவழிகளை அடைவதற்கான பாதைகளை ஒழுங்குபடுத்துதலும் கட்டுப்படுத்துதலும் முகாமை செய்தலும் ;

(ஈ) பகிரங்க வீதி ஒன்றில் அல்லது ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த பகிரங்க வீதி ஒன்றில் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வாகனங்களின் ஆகக்கூடிய பாரமும் அது தொடர்பான வேறு தன்மைகளும் ;

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அது அத்தகையவாறு வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், அது கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர், வசதிப்படுமளவு விரைவாகப் பாராளுமன்றத்தின் முன்னர் அங்கீகாரத்திற்கெனக் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வொரு ஒழுங்குவிதியும், அதன்கீழ், முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கம் இன்றி, அத்தகையவாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கஞ்செய்யப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கஞ்செய்யப்பட்டதாகக் கருதப்படும் தேதி கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதியின் மீறுதல், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றாதல் வேண்டும் என்பதுடன் ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப் பணத்தால் தண்டிக்கப்படற்பாலதானதாதலும் வேண்டும்.".

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவில் காணப்படும் "கால்வாய்" என்னும் வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

' "அதிகாரசபை" என்பது, 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டதான வீதி அபிவிருத்தி அதிகாரசபை எனப் பொருளாகும்' ;

(2) அப்பிரிவில் இடம்பெறும் "வீதியின் மத்தியில்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

' "பிரதான பொறியியலாளர்" என்பது ஏதேனும் பிராந்தியத்திற்கான பிரதான பொறியியலாளர் எனப் பொருளாகும்' ;

(3) "பணிப்பாளர்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"பணிப்பாளர்" என்பது பெருந்தெருக்கள் பணிப்பாளர் எனப் பொருளாகும் ; அத்துடன்

(4) அப்பிரிவில் தோன்றும் "கண்காணிப்பு எந்திரி" என்பதன் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலமும் :—

21. முதன்மைச் சட்டவாக்கத்தில், பின்வருவன மாற்றீடு செய்யப்படுதல் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய சொல்லமைப்புக்களைப் பதிலீடு செய்தல்.

(அ) "பெருந்தெருக்கள் திணைக்களம் அல்லது வேலைகள் பணிப்பாளர் ஒருவரின் திணைக்களம்" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக, "பெருந்தெருக்கள் திணைக்களம்" அத்துடன்

(ஆ) "கண்காணிப்பு எந்திரி" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக, "பிரதான பொறியியலாளர் அல்லது நிறைவேற்றுப் பொறியியலாளர்."

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.